[டாக்டர் கே. சமரசம்] [1984 மார்ச் 31

செல்வம் தெரு, அப்பாசாமி நாயுடு தெரு என்று இருக்கக் கூடிய அந்தத் தெருக்களுக்கு நேராக அந்த ஆற்றை, கடக்கக் கூடிய இடத்தில் படிக்கட்டுகளைச் சரி செய்யவும் பாலங்களைக் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டிருப்பதாக வும் அமைச்சர் மூலம் அறிகிறேன். அதை வேகப்படுத்தி, விரைந்து செய்து அந்த மக்களைக் பாதுகாக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சீக்கிரமாக வேகப்படுத்த ஆவன செய்யப்படும்

## 5. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) விதி 30(3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 30 (3)-ன் கீழ் கீழ்க்கண்ட திர்மானத்தை மொழிகிறேன்.

'' இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள எண் 3. அரசினர் சட்ட முன்வடிவுகள் என்கிற தலைப்பின்கீழ் 2-வதில் உள்ளதை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

## 6. அறிவிப்புகள்.

### (அ) கேளிக்கை வரி—உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1984 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி-உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர், தமது இசைவைத் தெரி வித்துள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS